குற்றவியல் நீதித்துறை நடுவர், நீதிமன்றம், ஓமலூர்.
முன்னிலை: திருமதி.S.ஷர்மிளா, B.A.B.L.(Hons.), L.L.M.
குற்றவியல் நீதித்துறை நடுவர், ஓமலூர்.
எஸ்.டி.சி.எண்.2555/2024

அ.சா. 1

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் 04–ம் தேதி திங்கள்கிழமை அரசு தரப்பு சாட்சி 01–வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திருமதி.மோகனபிரியா என்பவரின் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சௌமியா | தொழில் | |
| கணவர் பெயர் | மணிவண்ணன் | வயது | |
| கிராமம் | | தாலுக்கா | |

விசாரணை தொடங்கிய நேரம்: மதியம் 12.56 மணி,

Accused Selvakumar present. Advocate Mr.Jagadeesan present for accused. APP Mr. M.Suresh present.

**முதல் விசாரணை :**

1. நான் புதுக்கடையில் குடியிருந்து வருகிறேன். கடந்த 16.11.2023 ஆம் தேதி காலை 05.30 மணியளவில் நாலுக்கால்பாளம் – காமலாபுரம் செல்லும் சாலையில், நானும், பிரபா, சந்திரா ஆகியோர் சேர்ந்து நடைபயிற்சி சென்றோம். நடைபயிற்சி முடித்து வீட்டிற்கு செல்வதற்காக அதேசாலையில் கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தம் அருகே மேற்கிலிருந்து கிழக்காக நடந்து சென்று கொண்டிருந்தோம்.

2. அப்போது, மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி தடம் எண்.63 சி அரசு பேருந்து வேகமாக வந்து, எங்கள் மூவரின் மீதும் மோதிவிட்டது. சம்பவம் காலை 05.30 மணியளவில் நடந்தது. எனக்கு இடது தோள்பட்டை, முதுகு முதல் இடுப்பு வரை காயம் ஏற்பட்டது. பிரபா என்பவருக்கு பின் இடது பக்க தலை, கண் புருவம், முதுகு, மார்பிலும் நான்கு எலும்புகளில் எலும்பு முறிவு ஏற்பட்டது. கால் மற்றும் கை முட்டியில் காயம் ஏற்பட்டது. சந்திரா என்பவர் கவிழ்ந்து கீழே விழுந்துவிட்டார். அவருக்கு பெரிய காயம் எதுவும் இல்லை.

3. விபத்து ஏற்படுத்திய பேருந்தின் பதிவெண் டி.என்.30 என்.1202 ஆகும். ஆஜர் எதிரி தான் சம்பவத்தின்போது விபத்து ஏற்படுத்திய பேருந்தை ஓட்டி வந்தார். நான்

S SHARMILA
Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:53:03 +0530

விபத்து ஏற்பட்டவுடன் எனது கணவருக்கு போன் செய்து வரசொன்னேன். அவர் என்னை ஓமலூர் அரசு மருத்துவமனையில் சேர்த்தார். பிரபா என்பவர் பிரணவ் மருத்துவமனையில் சேர்ந்து சிகிச்சை பெற்றார். சந்திராவிற்கு பெரிதாக காயம் இல்லாததால் அவர் சிகிச்சை பெறவில்லை.

4. நான் ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது, போலிசார் அங்கு வந்து என்னை விசாரித்து, புகார் வாக்குமூலம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது. ( **அந்த கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**)

5. நான் 2 நாட்கள் உள்நோயாளியாக ஓமலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றேன். அதன்பின்பு, கோகுலம் மருத்துவமனையில் நான்கு நாட்கள் சிகிச்சை பெற்றேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

6. நாங்கள் பொதுவாக காலை 05.30 மணிக்கு நடைபயிற்சிக்கு செல்வோம். என்னுடன் சுமார் 10 நபர்கள் நடைபயிற்சிக்கு வருவார்கள். ஆனால் சம்பவத்தன்று நாங்கள் மூவர் மட்டும் தான் நடைபயிற்சிக்கு சென்றிருந்தோம். சம்பவத்தன்று கார்த்திகை மாதம் 1 ஆம் தேதி என்பதால் குளிர் அதிகமாக இருந்தது என்றால் சரி.

7. சம்பவத்தன்று குளிர் அதிகமாகவும், வெளிச்சம் குறைவாகவும் இருந்தது என்றால் சரியல்ல. சம்பவ இடத்தில் தெருவிளக்கு இருந்தது. நாங்கள் பொதுவாக புதுக்கடையில் நடைபயிற்சி துவங்கி, காமலாபுரத்தில் முடிப்போம். மேற்படி தூரத்தை சுமார் அரை மணிநேரத்தில் கடந்துவிடலாம் என்றால் சரி. காமலாபுரத்தில் இருந்து புதுக்கடையில் உள்ள எனது வீட்டிற்கு சுமார் 1/2 மணிநேரத்தில் செல்லலாம்.

8. என்னுடன் சம்பவத்தன்று நடைபயிற்சிக்கு வந்த பிரபா மற்றும் சந்திரா ஆகியோர் எங்கள் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் சரி. பிரபா மற்றும் சந்திரா இருவரும் எங்கள் வீட்டிற்கு அருகில் தான் குடியிருக்கிறார்கள். வழக்கு சம்பவம் காலை 05.30 மணிக்கு நடந்தது என்றால் சரி. நாங்கள் நடைபயிற்சி துவங்கிய நேரத்தில் தான் விபத்து நடந்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல.

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:53:07 +0530

9. நாங்கள் நடைபயிற்சிக்கு சென்றபோது, அதற்கான உடைகள் அணிந்து சென்றோமா அல்லது வழக்கமான உடையில் சென்றோமா என்றால் வழக்கமான உடையில் தான் சென்றோம். கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தம் அருகே சம்பவம் நடந்ததாக நான் கூறியுள்ள நிலையில், அங்கு பொதுமக்கள் குடியிருப்பு உள்ளது என்றால் சரி.

10. புகாரில், கட்டிக்காரனூர் பேருந்து நிறுத்தம் அருகே சம்பவம் நடந்தவுடன் நாங்கள் கீழே கடந்ததை பார்த்து, அருகில் இருந்தவர்கள் எனது வீட்டுக்காரருக்கு போன் மூலம் தகவல் கூறியதாக நான் கூறியுள்ள நிலையில், யார் தகவல் கொடுத்தார்கள் என்றும், அவர்களது பெயர், விவரம் குறித்தும், நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால், சரியல்ல. தகவல் கொடுத்தவரின் பெயர் வீரமணி என்று கூறியுள்னேன்.

11. சம்பவத்தின்போது, நாங்கள் மூவரும் பேசிக்கொண்டு கவனக்குறைவாக நடைபயிற்சி மேற்கொண்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எதிரியின் அடையாளத்த புகாரிலும், போலிசார் விசாரணையிலும் கூறவில்லை என்றால், சரி. எனக்கு எதிரியை தான் தெரியும். அவரது பெயர் விவரம் புகார் கொடுத்த போது தெரியாது.

12. விபத்திற்கு காரணம் எங்களது அஜாக்கிரதைதான் என்றாலும், அதனால் தான் பட்டியல் சாட்சி 3 சந்திராவிற்கு காயம் ஏதும் ஏற்படவில்லை என்றாலும், சரியல்ல. நாங்கள் அஜாக்கிரதையாக செல்லவில்லை. சந்திராவிற்கு உள்அடி மட்டும் தான் ஏற்பட்டது. வெளிக்காயம் ஏற்படவில்லை.

**மறுவிசாரணை : இல்லை**

**விசாரணை முடிந்த நேரம் : மதியம் 01.16 மணி.**

S SHARMILA

Digitally signed by S SHARMILA
Date: 2025.08.04 17:53:11 +0530